REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 6உ வியாழன் (20—6—57) ★ வெளியீடு: ஆனி 7உ வெள்ளி (21—6—57) [இதழ் 5

தாராளமாகத் தருவார்களாம்!

★

சென்னை மாநில சர்க்காருக்குத் தேவையான அளவு கோதுமை விநியோகிப்பதில் தடையே இல்லை என்று மத்திய சர்க்கார் வட்டாரம் தகவல் தந்துள்ளதாம். நியாய விலைக் கடைகள் மூலம் கோதுமை, (அரிசி அல்ல) தாராளமாகத்தர ஏற்பாடு செய்வார்களாம்.

பொது மக்களுக்கும் தொழிலாளருக்கும் ஒரு இணைப்புச் சங்கிலி தி. மு. கழகம்!

சமுதாயத்திற்கு ஆற்றவேண்டிய கடமை தொழிலாளிக்கு உண்டு

கடமை கண்ணியம் கட்டுப்பாடு குறித்து அண்ணா

"திராவிட முன்னேற்றக்கழகம் கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு என்ற மூன்று கோட்பாடுகளை வைத்திருப்பதை இங்கே ஒரு நண்பர் குறிப்பிட்டு, 'எங்களுக்கும்—தொழிலாளர்களுக்கும் அது தேவை' என்று குறிப்பிட்டுச் சொன்னார்; உண்மையாகவே தொழிலாளர்களுக்கும் அது தேவை என்பதை நான் பெரிதும் உணர்ந்து வரவேற்கிறேன்.

"**கடமை**—பாட்டாளிகளுடைய கடமை, சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலே இருக்கிறது.

"அவர்களுடைய **கண்ணியம்**, தங்களுடைய சக்தியைப் பாழ்படுத்திக்கொள்ளாததிலே இருக்கின்றது.

அவர்களுடைய **கட்டுப்பாடு**, தங்களுடைய சங்கங்களை உடைப்பதற்கு யார் எந்த மாதிரி முயற்சி எடுத்துக்கொண்டாலும் ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலே இருக்கின்றது.

"ஆனால் இன்றையத் தினம் அந்த மூன்று வார்த்தைகளும் எதற்குப் பயன்படுகிறதென்று பார்த்தால், முதலாளி நினைக்கிறான், 'உழைக்க வேண்டியது தொழிலாளியின் **கடமை**' என்று. **கண்ணியம்** எதிலே இருக்கிறதென்று கருதுகிறானென்றால், நம்மைப் பார்த்து 'கூலி அதிகமாகக் கொடு' என்று உரத்த குரலிலே கேட்காமலிருப்பதில்தான் என்று நினைக்கிறான். **கட்டுப்பாடு** எதிலேயிருக்கிறதென்று கருதுகிறானென்றால், அவனை ஏற இறங்கப் பார்க்காமல் தடுத்துநிறுத்த வேண்டிய வலிவு இருக்கிறதே சர்க்காரிடத்தில்—'அது கட்டுப்பாடு' என்று கருதுகிறான்.

"கம்மலைக் காதுக்குப் போட வேண்டும்; வளையலை கைகளிலே அணியவேண்டும். ஆனால், வளையலை எடுத்து காதுக்கும் கம்மலை எடுத்து விரலுக்கும் போட்டுக்கொண்டால் என்ன அர்த்தம்?—'நகை இருக்கிறது; ஆனால், இருக்க வேண்டிய இடத்தில் இல்லை' என்பதுதான்!

"அதைப்போல, கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு என்ற வார்த்தைகள் இருக்கின்றன; ஆனால், அது யாருக்குப் பயன்பட வேண்டுமோ அவர்களுக்குப் பயன்படவில்லை.

"அது நல்ல வகையிலே பயன்பட வேண்டுமானால், பொது மக்களுக்கு ஒரு கடமை இருக்கின்றது. தொழிலாளர்கள் எந்தப் பிரச்சினையை எழுப்பினாலும், தொழிலாளர் பக்கத்திலே நிற்பது தான் தங்கள் தலையாய கடமை என்று பொதுமக்கள் கருத வேண்டும்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற—எப்படிப்பட்ட கிளர்ச்சி எழும் நேரத்திலும் அவர்களுக்கு ஏற்படுகின்ற தொல்லைகளையும்—துயரத்தையும் அவர்கள் மனதிலே எழுகின்ற கிளர்ச்சியான எண்ணங்களையும் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துகின்ற—ஆங்கிலத்தில் சொல்லுவர்-Liaison Officer-தொடர்பு அதிகாரி, என்று-அதைப் போன்று பொதுமக்களுக்கும்—தொழிலாளர்களுக்கும் ஒரு இணைப்புச் சங்கிலி ஏற்படுத்துவது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகும்.

"அந்த முறையிலே நானும் என்னைச்சார்ந்த கழகமும்—நண்பர்களும் தொழிலாளர்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்பதை, நான் இன்றைய தினம் மகிழ்ச்சியோடு உறுதியாகக் கூறிக் கொள்கின்றேன்,"

—என்று அண்ணா அவர்கள், சென்னை 'ஜெனரல் அண்டு இண்டஸ்டிரியல் ஒர்க்கர்ஸ் யூனியன்' 13-வது ஆண்டுவிழா—மாநாட்டில் ஆற்றிய பேருரையில் குறிப்பிட்டார்; அவரது பேருரையின் முதல் இரு பகுதிகள் முன்னரே வெளிவந்துள்ளது; இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது :—

உழைப்பவனின் பலன் ஊதாரித்தனத்திற்கு - ஊழல் நிர்வாகத்திற்குப் பலியாகக் கூடாது

"'நன்றாக உழைக்க வேண்டும்; மேலும் மேலும் உழைக்க வேண்டும்' என்று எடுத்துச் சொல்லுகின்ற தத்துவத்தின் வரையில், 'உழைத்தால்தான் செல்வம் வளரும்; செல்வம் வளர்ந்தால்தான் நாட்டினுடைய 'அந்தஸ்து' உயரும்' என்பதிலே யாருக்கும் மறுப்பு கிடையாது.

"வாழை குலைவிட்டால்தான் அதற்குப் பிறகு பழம் பழுக்கும்; பழம் பழுத்தால்தான் நமக்கு உபயோகப்படும்; அதிலே யாருக்கும் சந்தேகம் அல்லை.

"ஆனால், வாழை குலைவிடுகிறது; குலையை வெட்டிக் கொண்டு வரலாமென்று போகிற நேரத்தில், வேறு யாரோ வெட்டிக்கொண்டு போய்விட்டால், 'வாழை குலைவிட்டால் என்ன—விடாவிட்டால் என்ன?' என்று ஒருநாளைக்கு இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு சொல்லத்தோன்றுதா?

"அந்த முறையிலே உழைப்பினுடைய பயனை வழியிலே போகிற யாரோ எடுத்துக் கொண்டு போய்விடுகிறான் என்று தெரிந்தால், எப்படி உழைப்பதற்கு மனம் வரும்?

"உழைப்பதற்கு மனம் இருக்க வேண்டுமானால், உழைப்பாளிக்கு உழைப்பினாலே கிடைக்கின்ற ஊதியம் 'அவன் வாழ்க்கையை நிம்மதியாக வைப்பதற்கு பயன்படுகின்றது' என்ற எண்ணம் பிறக்கவேண்டும்; அந்த எண்ணம் பிறக்கவேண்டுமென்றால், உழைப்பவனுடைய பலன் ஊதாரித்தனமாக செலவழிக்கப்படாமல், ஊழல் நிர்வாகத்திற்கு அது பலியாக்கப்படாமல், பெரிதும் சுரண்டி பிழைப்பவர்களுக்குப்போய் அது சேர்ந்து விடாமல், குறிப்பிட்ட அளவுக்கு நாட்டுமக்களுக்கும், அதைவிட குறிப்பிடத்தக்க அளவுக்கு பாட்டாளிமக்களுக்கும் அந்த உழைப்பு வருகிறதென்றால்தான் பயன்படும்.

"சாதாரணமாக, மோட்டார் கெட்டுவிட்டால் வழியிலே வருகின்ற 4 - 5 தோழர்களை கெஞ்சி 'ஐயா கொஞ்சம் தள்ளிவிடுங்கள்' என்று கேட்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். தள்ளியானதும் - மோட்டார் ஓட ஆரம்பித்ததும் சில மோட்டார்காரர்கள், உடனே ஓட்டிக்கொண்டே போய்விடுவார்கள்; மோட்டாரை தள்ளிவிட்டாரே அந்தத் தோழர் வியர்வையைத் துடைக்கக்கூட நேரமில்லாமல் திட்டுவார் - 'இந்தப் பாவிக்குப் போய் மோட்டார் தள்ளினேனே'-என்று! ஏனென்றால், தள்ளுகிறபோது அவருடைய எண்ணம் என்னவென்றால், தள்ளிவிட்டு மோட்டார் ஓட ஆரம்பித்தால் நம்மை ஏற்றிக்கொண்டு போய் கிராமத்து வரையிலே விட்டு விடுவார் என்ற ஆசையிலே அந்தத் தோழர் தள்ளுகிறார். மோட்டாரிலே உட்கார்ந்து கொண்டிருப்பவர் 'இந்த மோட்டார் இப்பொழுது பழுது பட்டிருக்கின்றது; இந்தப் பயல் கிடைத்தான்—இவன் தள்ளிவிட்டு வேகமாக கிளம்பிவிட்ட பிறகு, இவனை யார் பார்க்கப் போகின்றார்கள்; இவன் எப்பொழுது நம்மை பார்க்கப் போகிறான்—நேரே போயே விடலாம்' என்ற எண்ணத்தில் ஓடி விடுகிறார்களே, அந்த முறையில் இன்றையத்தினம் முதலாளித்துவம் இருக்கிறது.

தொழில் வளருகையில் தொழிலாளியின் தொல்லைகளும் வளருவானேன்?

"தொழில் பழுது பட்டால் தள்ளப்படுவதற்குப் பாட்டாளி அழைக்கப்படுகிறான்; தொழில் ஓட ஆரம்பித்தால், பாட்டாளி, பாதையிலே நிற்கிறான் — தொழில் வளருகிறது.

"தொழில் வளராமலா (ஒளி விளக்குகளைக் காட்டி) இவைகளெல்லாம் கிடைத்தன? தொழில் வளராமலா மவுண்ட் ரோடிலே 22 அடுக்குஎன்றும், 32 அடுக்கு என்றும் மாடி வீடு கட்டுகின்றார்கள்? தொழில் வளராமலா கடலுக்கடியில் இருக்கின்ற முத்தை மூச்சடக்கி எடுக்கின்றார்கள்? தொழில் வளராமலா கோலாரிலே 10,000 அடி ஆழத்திலே தூங்கிக் கொண்டிருக்கும் தங்கம் வெளியிலே வந்து மின்னுகின்றது? தொழில் வளராமலா ஆகாய விமானம் பறக்கின்றது? தொழில் வளராமலா துரைத்தனத்தார் நடத்துகின்ற காரியாலயங்களுக்கு கட்டடம் எழும்புகின்றது?

'சட்டம்தான் பலமாக இருக்கிறதே' என்று சொன்னால், கதவிலே செல் பிடித்துவிட்டது — அதனால் ஓட்டை விழுகிறது; ஓட்டை விழுந்தால் தாழ்ப்பாள் இற்று கீழே விழுந்துவிடுகிறது— அதனால் உள்ளே நுழைந்து விட முடிகிறது.

"அதைப் போலத்தான், பாட்டாளிகளின் விஷயத்தில், இன்றைய தினம் நாட்டை ஆளுகின்றவர்கள் நல்லவகையிலே நடக்கவேண்டுமென்றால், உழைப்பினுடைய மதிப்பை உணர்ந்து பேசுவதோடு மாத்திரமல்லாமல், உழைப்பாளியினுடைய வாழ்க்கையை மதிப்பானதாக்கி, உழைப்பினுடைய பலன் உழைப்பாளிக்குக் கிடைக்கத்தக்க அளவுக்கு நாட்டிலே ஒரு நல்ல சட்டதிட்டங்கள் இருக்கவேண்டும்.

முகம் சிவந்தவரெல்லாம் கம்யூனிஸ்டுகளென நாட்டை ஆளும் சர்க்கார் கருதுவானேன்?

"'பீடி சுற்றும் தொழிலிலேயிருந்து சாபி ஆற்றும் தொழில் வரையிலும் கூலி நிர்ணயம் வேண்டும்,' என்று கேட்டால், 'உழைப்பாளி மக்களே! நீங்கள் உலகத்தைக் காப்பாற்ற அல்லவா உழைக்கின்றீர்கள்? நீங்கள் இப்படி ஒரு அணுவுக்கும் இரண்டணாவுக்கும் மல்லுக்கு நிற்கலாமா? அதற்கு மற்றவர்களை துணைக்கு அழைத்துக் கொண்டு வம்புக்கு வரலாமா? எங்களையே பார்த்துக் கேளுங்கள்! நாங்கள் சந்தோஷமாக இருக்கிறோம் பார்த்துக் கேளுங்கள்! எங்கள் கையிலே பணம் இருக்கிறபோது கேளுங்கள்! அப்பொழுது

கதவை செல்லரித்து விட்டால் தாழ்ப்பாள் எப்படிப் பயன்படும்?

"தொழில் வளருகின்றது — தொழிலாளியினுடைய தொல்லையும் வளருகின்றது; அவனுக்கு மனதிலே இன்றையத்தினம் திருப்தி வளரவில்லை. இந்த திருப்தி வளராத நேரத்தில் அவனுடைய முகம் சிவக்கிறது; முகம் சிவந்தால் **அவன் கம்யூனிஸ்டாகி விடுகின்றான் என்று நாட்டை ஆளுகின்ற சர்க்கார் கருதுகிறார்கள்.**

"முகம் சிவந்தவனெல்லாம் கம்யூனிஸ்டும் அல்ல; தொழிலாளர் நிறுவனங்களை நடத்துபவர்களெல்லாம் கம்யூனிஸ்டுகளும் அல்ல! ஆனால், தொல்லையைத் துடைப்பதற்குத் தொழிலாளர் நிறுவனங்களுக்கு நல்லவர்கள் கிடைக்காவிட்டால், அவனிடத்தில் உண்மையிலே கம்யூனிஸ்டுகள் வந்து புகுவதற்கு வழி ஏற்பட்டுவிடுகிறது. அதை யார் தடுக்க முடியும்?

"கதவிலே 'செல்' பிடித்து விட்டால் தாழ்ப்பாள் மட்டும் எப்படிப் பயன்படும்? 'தாழ்ப்பாள்தான் இரும்பிலே போட்டிருக்கிறேனே?' என்று சொல்வதைப்போல,

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 20—6—57 வியாழன்

வேண்டாம் இந்த ஏற்பாடு!

வட நாட்டிற்குத் தென்னாடு நிரந்தரமான அடிமைக்காடாக இருக்க வேண்டுமென அடவாதம் புரியும் 'அகில இந்திய ர'க்களின் கவனத்திற்கு விசேடமாக உரிய செய்தி ஒன்று வெளியாகியிருக்கிறது.

உணவுப் பற்ருக்குறை இந்தியத் துணைக்கண்டமெங்கும் பரவலாக உள்ள வருந்தத்தக்கதோர் நிலை என்று கூறுகிருர்கள் டெல்லிப் பெரியவர்கள்.

பற்ருக்குறையினுலோ, பதுக்கல்காரர்களின் கொள்ளை இலாபப் பேராசையினுலோ, அல்லது வேறெந்தக் காரணங்களினுலோ உணவுப் பொருள்களின் விலை ஏறியிருக்கிறது. ஏழை எளியோருக்கு எட்டாத உயரத்திற்கு என்பதும், எல்லோரும் ஒப்புக்கொண்ட ஒரு உண்மையாகும்.

இந்த விலை ஏற்றத்தை மட்டுப்படுத்தவும், நியாயவிலையில் மக்களுக்கு உணவு கிடைக்கச் செய்யவும் பலனுள்ள உருவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது ஆற்றலுள்ள ஒரு சர்க்காரின் தலையாய கடமையாகும்.

ஆனல் டெல்லி சர்க்கார் இந்த விஷயத்தில் இதுகாறும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் கோரிய விளைவைத் தரவில்லை என்பது பிரத்தியட்சமாகும்.

அவ்வாறு டெல்லி மேற்கொண்ட பலன் தராத நடவடிக்கைகளில் ஒன்றுதான், மாநில சர்க்கார்கள் மூலம் நியாயவிலைக் கடைகளைத் திறப்பது என்பதாகும்.

இந்த நடவடிக்கை, தமிழ் நாட்டிலும் விரிவாக்கப்பட்டு வருவதாக நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறியிருக்கிருர்.

அவர், இந்த நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கப் போவதாக செய்தி தந்த நேரத்திலேயே மற்ருெரு செய்தியையும் கூறியிருக்கிருர்.

'நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி வழங்கப்படும்போது கோதுமையும் கட்டாயமாக வாங்குமாறு நிர்ப்பந்திக்கப்படுவர்' என்ற தகவலையும் தெரிவித்திருக்கிருர்.

'அரிசியில் நான்கில் ஒரு பாகமா அல்லது மூன்றில் ஒரு பாகமா, எந்த அளவில் கோதுமை வாங்குமாறு வற்புறுத்துவது என்பதைத்தான் இன்னும் சர்க்கார் முடிவுசெய்யவில்லை' என்று கூறுகிருர், மந்திரி.

இந்தச் செய்தியைத்தான், 'அகில இந்தியா'க்களின் கவனத்திற்கு உரியது என்று கூறினேம்;

இந்தப் பகுதியில் வாழுகிற மக்கள் பிரதான உணவாக அரிசியையே கொண்டவர்கள்; இங்கு அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டால், 'கோதுமையைச் சாப்பிடுங்கள்' என்கிறது, டெல்லி சர்க்கார்! மாநில மந்திரிகளும் கிளிப்பிள்ளைகளாகின்றனர்!

ஆனல்...! வடநாட்டு மக்கள் கோதுமையை பிரதான உணவாகக் கொண்டவர்கள்; அங்கும் உணவுத் தட்டுப்பாடு என்று கூறப்படுகிறது; ஆனல், அந்த மக்களுக்கு மாற்று உணவுப் பொருள் ஏதேனும் சிபாரிசு செய்யப்படுகிறதா என்ருல், இல்லை; மாருக, அமெரிக்காவுடனும் கனடாவுடனும் ஒப்பந்தம் செய்து கொண்டு கோடிக்கணக்கான டன் கோதுமை இறக்குமதி செய்யப்படுகிறது என்ற செய்திதான் சில நாட்களுக்குமுன்பு வந்தது.

முன்ஷி என்ருெரு பெரிய மனிதர்—வடவர், டெல்லியில் உணவு மந்திரியாயிருந்தபோது, 'அரிசி கிடைக்காவிட்டால், தமிழர்களே! பருத்திக்கொட்டை சாப்பிடுங்கள்; சத்துள்ளது!' என்ற சிபாரிசைச் செய்தார். அன்றுகூட வடநாட்டு உணவுப் பற்ருக்குறைக்கு எந்தவித மாற்று உணவுப் பழக்கமும் உபதேசிக்கப்படவில்லை. அன்றும் நாம், தமிழரை அவமானப்படுத்தும் இந்தச் சிபாரிசைக் கண்டித்தோம். கைகட்டி-வாய்பொத்தி நின்றனர் 'அகில இந்தியா'வுக்கு அடிமையானவர்கள்.

இன்றும்! வடநாட்டு கோதுமைப் பற்ருக்குறைக்கு இறக்குமதி வழியாகக் கொள்ளப்படுகிறதே தவிர, மாற்று உணவுப் பழக்க உபதேசமல்ல. ஆனல் தமிழ் மக்களுக்கு—தென்னட்டவர்க்கு 'கோதுமை சாப்பிடுங்களேன்' என்ற சிபாரிசுகூட அல்ல—'கட்டாயம் வாங்கித்தானக வேண்டும்' என்ற கட்டளைதான் பிறக்கிறது.

இதில் உள்ள நியாய அநியாயங்கள், வடக்கும் - தெற்கும் இப்போதைய ஏகாதிபத்திய அரசியல் அமைப்பில்தான் 'சுகம்' காண வேண்டும் என்று இணை கிற்றுக்களைத் தேடி அலையும் 'அகில இந்தியா'க்களுக்குத்தான் வெளிச்சம்.

ஒரு சமுதாயத்தின் பரம்பரையான உணவுப் பழக்கத்தை மூர்க்கத்தனமான நிர்ப்பந்தங்களால் மாற்றிவிட நினைக்கிருர்களே டில்லிப் பெரியவர்கள், இந்த அநியாயச் செயல், அந்தச் சமுதாயத்தின் நெஞ்சைக் குறுகுறுக்க வைப்பதாகாதா? இது போன்ற கேவலமான செயல்கள் மூலமும், வடநாட்டு ஏகாதிபத்திய வாதிகள், தெற்கின் தனித்தன்மையை அழித்துவிடச் சதி செய்கிருர்கள் என்று குற்றஞ்சாட்டுவதில் 'அகில இந்தியா'க்கள் என்ன தவறு காண முடியும்?

மேலும், கோதுமையும் வாங்கவேண்டுமென நிர்ப்பந்திப்பதால் ஏற்படக்கூடிய விளைவு ஒன்றையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகிருேம்.

நியாயவிலைக் கடைகளில், வேண்டாத கோதுமையை விலைகொடுத்து வாங்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டால், கோதுமைக்கு அநியாயமாகக் காசு தந்து வாங்குவதைவிட, அந்தக் காசைக் கொண்டு வெளியில் கூடுதலான விலை கொடுத்தேனும் அரிசியை வாங்கிக்கொள்ளலாம் என்ற நினைப்பு மக்களுக்கு நிச்சயம் எழும். அப்போது, 'ஏறிய விலையை மட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை' என்ற நியாய விலைக் கடைகளின் நோக்கம் தோல்வியுறும் என்பதையும், டில்லிதிணித்தமுடிவை ஏற்றுக்கொண்டுள்ள சென்னை மந்திரிசபைக்கு நினைவூட்ட விரும்புகிருேம். வேண்டாம் இந்த கோதுமை! வேண்டாம் இந்த ஏற்பாடு!

ஆந்திரத்திற்கு ஆசை காட்டுகிருர்கள்!

புதுடில்லி, ஜுன் 18—

ஆந்திர மாநிலத்தில் ஓடும் கோதாவரி ஆற்றின் குறுக்கே ஒரு பெரிய அணைகட்ட ஆராயப்பட்டு வருகிறதாம்.

இந்த அணை 6,180 அடி நீளம் என்றும், இதற்காக ரூ. 45 கோடி செலவிடப்படும் என்றும், 4½ இலட்சம் கிலோவாட் மின்சாரம் இங்கு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்றும், இந்த அணை உலகத்தில் இரண்டாவது பெரிய அணை என்றும் கூறப்படுகிறது.

ஆரிய சமாஜிகள் ஆர்ப்பாட்டம்

பஞ்சாப் சட்டசபை முன் சிலர் கைது

இந்திக்கு ஆதிக்கம் கோரி பஞ்சாப் சட்டசபை முன் ஆர்ப்பாட்டம் செய்யும் ஆரிய சமாஜத் தொண்டர்கள் சிலர் இன்று போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

இவர்கள் சட்டசபையை நோக்கி கூவிக்கொண்டு வரும்போது, போலீசார் தடுத்து நிறுத்தியிருக்கின்றனர்; இவர்கள் தொடர்ந்து, போலீசாரையும் மீறிக்கொண்டு ஊர்வலம் செல்ல முற்பட்டபோது கைதாயினராம்.

சேதி, தெரியுமா?

1954, 1955, 1956 ஆகிய மூன்று வருடங்களில்தான் உணவுத் தானியங்களை சிறுஅளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்வது இந்தியாவுக்கு சாத்தியமாயிற்ரும்!

'மொத்தம் 1,65,000 டன் ஏற்றுமதியாயிற்று; அதன் மூலம் கிடைத்த மொத்த வருமானம் ரூ. 8,78,00,000' என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

1954-ல் ரூ. 47,02,00,000 மதிப்புள்ள 8,08,000 டன் உணவுத் தானியங்களை இந்தியா இறக்குமதி செய்ததாம்!

1955-ல் 7 இலட்சம் டன்னும் (ரூ. 33,11,00,000); 1956-ல் 14,20,000 டன்னும் (ரூ. 56,34,00,000) இறக்குமதி செய்யப்பட்டதாம்!

தெலுங்கன்குடிக்காடு கழகத் தோழர்கள் தாக்கப்பட்டனர்

பி. சோ. ஊழியர்களின் வெறியாட்டம்

ஒரத்தநாடு, ஜுன் 16—

தஞ்சை மாவட்டம் தெலுங்கன்குடிக்காடு கழகத் தோழர்கள் பி. சோ. ஊழியர்களால் தாக்கப்பட்டிருக்கிருர்கள்; பொதுக்கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்து அதை வெற்றிகரமாக நடத்திய கிளைச் செயலாளர் தோழர் கு. உலகப்பன் அவர்கள், சவுக்குக் கட்டையினுல் தாக்கப்பட்டு படுகாயமுற்றிருக்கிருர். கழகத் தோழர்கள் சிலரின் பொருள்களைப் பறித்துச் சென்றிருப்பதோடு பெட்ரோமாக்ஸ் விளக்கு ஒன்றும் நொறுக்கப்பட்டு அவர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

14—6—57 மாலை தெலுங்கன் குடிக்காடு கிராமத்தில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ அவர்களும் கலந்துகொண்டு தி. மு. கழகத் துவக்க விழா நடத்தப்போவதாக அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தது.

எப்படியாவது இத்துவக்க விழாவினை நடத்தவிடக்கூடாது என முடிவு செய்த பி. சோ.-வினர், சுமார் 100 பேர்களைத் திரட்டி, கம்பு தடிகளுடன் காலை நேரத்திலேயே கிராமத்தில் புகுந்து கலகம் செய்திருக்கின்றனர். பின்னர், ஊர்ப் பொதுமக்களும், போலீசாரும் தலையிட்டு கூட்டத்தை நடத்துவதற்கான வழிகளைச் செய்து கூட்டத்தை நடத்தினர்.

மாலை 5-30 மணியளவில் கூட்டம் நடைபெற்றது. தோழர் என். எஸ். இளங்கோ அவர்களும், என். வி. நடராசன் அவர்களும் சிறப்புரையாற்றியபின் கூட்டம் மிக வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

மக்கள் ஏராளமான அளவில் திரண்டு நின்று மழையையும் பொருட்படுத்தாது கருத்துரை பெற்றனர்.

பின்னர் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

பின்னர் 8-30 மணியளவில் துணைப் பொதுச்செயலாளர் அவர்களையும், மாவட்டச் செயலாளர் அவர்களையும் பஸ் எற்றிவிட இரண்டு பர்லாங் தூரம்வரை தோழர்கள் தொடர்ந்து வந்தனர்.

அவர்கள் பஸ் ஏறிச் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் பின்னுலேயே தொடர்ந்து வந்த பி. சோ. கட்சியினர் 'பெட்ரோமாக்ஸ்' விளக்கை உடைத்துத் தூளாக்கியிருக்கின்றனர்.

செயலாளர் தோழர் கு. உலகப்பன் அவர்களைச் சவுக்குக் கட்டையினுல் மண்டையில் தாக்கிப் படுகாயப்படுத்தியிருக்கின்றனர்.

வட்டச் செயலாளர் தோழர் தயிலப்பன் அவர்களை அடிப்பதற்குத் துரத்தவே, அவர் இருட்டில் ஓடி ஒளிந்திராவிடில் அவர் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கக்கூடும்.

துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்களையும், மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்களையும் தாக்குவதற்குத் திட்டமிட்டே தொடர்ந்து வந்திருக்கிருர்கள் என்பதற்கும், சரியான சமயத்தில் பஸ் கிடைத்திராவிடில் அவர்களும் தாக்கப்பட்டிருக்கக்கூடும் என்பதற்கும் ஆதாரம் இருக்கிறது.

இவ்வளவு வெறியாட்டத்தையும், பி. சோ. ஊழியர் திரு. வைத்திலிங்க சேதுரார் முன்னின்று நடத்தியிருக்கிருர் என்றும், அவரேதான் உலகப்பன் அவர்களை நேரடியாக சவுக்குக் கட்டையினுல் தாக்கிப் படுகாயப்படுத்தியிருக்கிருர் என்றும் தெரியவருகிறது.

மாவட்டச் செயலாளர் அங்கு சென்று நிலைமையைக் கவனித்துவருவதோடு தோழர்களை அமைதியோடு இருக்கும்படியும் கூறிவருகிருர். (ந. நி.)

மொரார்ஜி காணும் காங்கிரஸ் நிலைமை

பெங்களூர், ஜுன் 18—

"காங்கிரஸ் கஷ்டமான காலத்தைக் கடந்து வருகிறது; இதற்கு நாம்தான் பொறுப்பு. காங்கிரஸ்மீது முன்புமக்களுக்கு இருந்த கவர்ச்சி இப்போது இல்லை. காங்கிரஸ்காரர்கள் செயலற்று இருக்கின்றனர். காங்கிரஸ்காரர்கள் ஒற்றுமையுடன் உழைக்கவும், தங்களின் அடிப்படை பலவீனத்தை உணர்ந்து அவற்றிற்கு நிவாரணம் கண்டுபிடிக்கவும் வேண்டும்"

என்று மொரார்ஜிதேசாய் இங்கு காங்கிரஸ் ஊழியர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

வடநாட்டு மாநிலத்தில் சாதிக் கொடுமையின் வேகம்

தாழ்த்தப்பட்ட மக்கள் கட்டிவைத்து அடிக்கப்பட்டனராம்!

புவனேசுவரம், ஜுன் 18—

ஒரிசா மாநிலத்தில் சில இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் 'சாதி இந்து'க்களால்—'உயர்ந்த சாதி'யினரால் அடித்துக் கொடுமைப் படுத்தப்பட்டதுபற்றி ஒரிசா சட்டசபையில் பேசப்பட்டிருக்கிறது.

ஜகத்சிங்பூர், திரிடால், பலிகுண்டா முதலிய போலீஸ் எல்லைக்குள் பல சந்தர்ப்பங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்கப்பட்டதாகவும், இந்தச் சம்பவங்கள் மே 21-ந்தேதி முதல் ஜுன் 9-ந்தேதிக்குள் நடைபெற்றன என்றும் சட்டசபையில் உள்நாட்டு மந்திரி ஒப்பியிருக்கிருர்.

சுமார் 150 சதுரமைலுக்கு உட்பட்ட இந்தப் பிரதேசத்தில் பல இடங்களில், 'மக்கள் நீதிமன்றம்' என்ற பெயரில் ஊர்ப் பெரியவர்கள் கூடிக்கொண்டு, இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களை, 'கட்டிவைத்து அடிக்கவேண்டும்' என்று தீர்மானித்தார்களாம்!

அதன்படி, பல அரிஜன்களைக் 'கைது' செய்து 'காவலி'ல் வைத்து, 'விசாரணை' நடத்தி, கட்டிவைத்து அடித்தார்களாம்!

தகவல் கிடைத்ததும், ஒரு நாளைக்குள் போலீசார் விரைந்து பலரைக் காப்பாற்றியிருக்கின்றனர் என்றும் மந்திரி விளக்கம் தந்திருக்கிருர்.

இந்தநிலை இப்போது கட்டுக்கடங்கிவிட்டதாகவும் மந்திரி கூறினர்.

'இதுகுறித்து விவாதிக்க சட்டசபை நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டும்' என்ற ஒரு எதிர்க் கட்சி உறுப்பினரின் பிரேரணை நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

கருமான், தச்சு வேலைகளில் இயந்திரங்கள்

உபயோகிப்பது குறித்து கற்றுத்தர ஏற்பாடாம்

சில சிறு இயந்திரங்களை எப்படி உபயோகப்படுத்துவது என்பதை தச்சர்களுக்கும், கருமான்களுக்கும் கற்றுத் தருவதற்காக ஆறு மோட்டார் வண்டிகளை சென்னை சர்க்கார் தொழில் இலாகா தயாரித்திருக்கிறதாம்.

இவற்றில் இரண்டு திருநெல்வேலிக்கு அனுப்பப்பட்டுள்ளதாம்.

அவை, கிராமங்களுக்குச் சென்று, தச்சு வேலையிலும், கருமான் வேலையிலும் இயந்திர சாதனங்களை எப்படி உபயோகிப்பது என்று கற்றுத்தரும் என்றும், அத்துடன், மின்சாரத்தால் இயங்கும் சிறு இயந்திரங்களை உபயோகிப்பது பற்றியும் விளக்கம் தரும் என்றும், இதன் நோக்கம் உற்பத்தியைப் பெருக்குவது என்றும் கூறப்படுகிறது.

சென்னை-மவுண்ட்ரோடு பகுத்தறிவு பாசறை முதலாண்டு விழா

மு. கருணாநிதி மற்றும் தோழர்கள் பேச்சு

சென்னை, ஜுன் 18—

16—5—57 மாலை 6-30 மணியளவில், சென்னை—மவுண்ட் ரோட் பகுத்தறிவுப் பாசறை நூல் நிலைய முதலாண்டு விழா பைராங்ஜங் பகதூர் தெருவில் (மிட்லண்ட் திரையரங்கின் எதிரில்) தோழர் ந. இராசா தலைமையில் நடைபெற்றது.

விழாவில் தோழர்கள் மு. கருணாநிதி, க. அறிவழகன், முகவை ஆர். எஸ். பாண்டியன், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் த. ந. சம்பந்தம், என். கிருட்டிணன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். பொது மக்கள் பெரும் அளவில் திரண்டிருந்து தோழர்களின் உரையைக் கேட்டனர். தோழர்களுக்குக் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

தலைவர் தனது உரையில், பகுத்தறிவுப் பாசறை இவ்வட்டத்தில் ஆற்றியுள்ள சிறப்பான பணிகளை விளக்கியும், பகுத்தறிவுப் பாசறை அமைக்கப்படுவதற்குமுன், மூடபழக்கவழக்கங்களோடு திருமண முறைகளைக் கையாண்ட பொதுமக்கள், தற்போது பாசறையின் தீவிர பகுத்தறிவுப் பிரச்சாரத்தால் சீர்திருத்த மணமுறைகளை மேற்கொண்டிருக்கின்றனரென்றும், அந்த வட்டத்தில் தேர்தல் என்றாலே காங்கிரசுக்குத்தான் வெற்றியென்ற நிலையிருந்ததென்றும், பாசறையின் ஓய்விலா உழைப்பால் அந்நிலை மாற்றப்பட்டு அதை இத்தேர்தலில் செயல்மூலம் நிரூபித்த பெருமை உண்டென்றும் விளக்கிப் பேசினார்.

அடுத்துப் பேசிய எஸ். என். கிருட்டிணன் அவர்கள், அண்ணா கூறியதற்கொப்ப, வீட்டுக்கு வீடு பகுத்தறிவுப் பாசறைகள் தோன்ற வேண்டுமென்றும் அந்த வகையில் தி. மு. கழகத்தின் துணை அமைப்புகள் பாடுபட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, வரிக் கொடுமையால் சேரிடும் கேடுகளை விளக்கிப் பேசினார்.

அடுத்து, செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் தோழர் த. ந. சம்பந்தம் அவர்கள் பேசுகையில் 'பகுத்தறிவு என்று சொன்னவுடனே நம்மை சிலர் எதிர்க்க ஆரம்பித்துவிடுகிறார்கள். ஏன் எதிர்க்கிறார்கள் என்றால், அவர்கள் நாட்டு மக்களை ஏமாற்றியே பிழைப்பை நடத்திவந்திருக்கிறார்கள். நாம் பகுத்தறிவு வேண்டும் என்று சொன்னவுடனே, எங்கே தங்களுக்குப் பிழைப்புக்கு வழியின்றி போய்விடுமோ என்ற அச்சத்தால் நம்மை எதிர்க்கிறார்கள்' என்றார்.

மேலும் அவர் பேசுகையில், 'அரியலூர் இரயில் விபத்துக்குக் காரணம் கூறிய தோழர் அளகேசன், இரயில்வே நூற்றாண்டு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றதென்றும், அதிலே பட்ட 'கண்திருஷ்டி'தான் விபத்துக்குக் காரணம் என்று கூறினார்; மக்களிடம் மூடநம்பிக்கை இருப்பதால் ஒரு மந்திரி துணிந்து இவ்வாறான பதில்களைக் கூற முடிகிறதென்றார். மூட நம்பிக்கையை விட்டொழிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர் பேசிய தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் அவர்கள், 'நாட்டிலே உள்ள ஏனைய அகில இந்திய கட்சிகளுக்கும் நமக்கும், சமுதாயத்தைப் பற்றிய சிந்தனை வழி ஒன்றுபட்டாலும், நேர்மையான முறையில் செயலாற்ற அடிப்படை வேறுபாடுகள் நிறைய இருக்கின்றன. அதே முறையில் உலக சமாதானம் பற்றிய முக்கியப் பிரச்சினைகளை உலகத்திலுள்ள ஆசிய நாடுகள் அனைத்திலும் வலியுறுத்தப்பட்டும், வல்லரசுகள் தங்கள் 'கோஷ்டி' நிலையை மாற்றிக்கொள்ளவும் முன்வர மறுக்கின்றன. மற்றும், விடுதலை கோரும் மக்களும் அடக்கி ஒடுக்கப்பட்டு வருகிறார்கள்' என்றார்.

மேலும் அவர் பேசுகையில், தென்னகத்தின் விடுதலையின் அவசியத்தையும், அதை மறுக்கும் 'ஏக இந்தியா'க்களின் போலி வேடத்தையும் விளக்கினார்.

அடுத்துப் பேசிய தோழர் க. அறிவழகன் அவர்கள், 'நாம் 20-ம் நூற்றாண்டிலும் பகுத்தறிவு தேவை என்பதை மக்களுக்கு கூறிவருகிறோம்; அதனால் மக்களுக்கு பகுத்தறிவே இல்லையென்று பொருள் அல்ல. தங்களின் அறிவை வேறுவகையில் பயன்படுத்துகிறார்கள். ஆனால் நாம்தான் 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு' என்ற தூயநெறியுடன் கூடிய பிரச்சாரம் செய்து வருகிறோம்' என்றார்.

மேலும் அவர் பேசுகையில், குறட்பாக்களின் உண்மைப் பொருளை மறைத்து திரித்துக் கூறியிருக்கிற உண்மையையும், உண்மையான பொருளை எளியமுறையில் விளக்கியும், சீரிய உதாரணங்களால் எடுத்துக் காட்டியும், அரசியல்—பொருளாதார—சமுதாயக் கொள்கைகளை விளக்கிக் காட்டியதோடு, அதற்குள்ள தொடர்பையும் விளக்கினார்.

இறுதியாகப் பேசிய தோழர் மு. கருணாநிதி அவர்கள், சமுதாயத்தின் கோணல்களை மிகத் தெளிவாக விளக்கி பேசியதோடு கழகம் சமுதாயத்திற்காற்றிவரும் தொண்டினையும், அதற்கான கொள்கைகளையும் விளக்கினார். 'சமுதாயத்தில் நல்ல கருத்துகள் புகவேண்டும்; என திரைப்படத்தில் நாம் எழுதினால், அதைத் தணிக்கை அதிகாரிகள் வெட்டி சீரழிப்பதையும், அவர்களின் 'நுண்ணறிவு' எப்படியெல்லாம் பயன்படுகிறதென்பதற்கான சான்றுகளையும் காட்டிப்பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

தீர்மானங்கள்

இந்தியப் பேரரசின் ஆதரவின் கீழ் நடத்தப்பட்டுவரும் 'இந்திய காபி போர்டா'ரின் நிலையங்கள் சிலவற்றை மூடியதோடல்லாமல், சுமார் 125 தொழிலாளர்களையும் வேலையிலிருந்து நீக்கவும் இந்தியப் பேரரசின் 'காபி போர்டு' உத்தரவு பிறப்பித்திருப்பது தென்னகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகயுள்ள தற்சமயம் மேலும் அதிகரிப்பதாக இருப்பதால், இவ்வுத்தரவைக் கண்டித்தும், உடனடியாக அதனை வாபஸ் பெறுமாறு கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மற்றொரு தீர்மானத்தில் புதிய வரிகளைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஊதியத்தை உயர்த்த டில்லி தாக்கீது!

இடைநிலை பள்ளி ஆசிரியர்களிடம் அக்கறை பிறந்துவிட்டது

புதுடில்லி, ஜுன் 18—

செகண்டரி பள்ளி ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துமாறு மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்கு கட்டளை பிறப்பித்துள்ளது. இந்த ஊதிய உயர்வினால் ஏற்படும் அதிகச் செலவில் 50 சத விகிதத்தை ஏற்பதற்கு மத்திய அரசாங்கம் இப்போது முன்வந்திருப்பதும், 1957—58-ம் ஆண்டு முதல் இந்த நிதி உதவி கிடைக்கும் என்று அறிவித்திருப்பதும், செகண்டரி பள்ளி ஆசிரியர்களிடம் மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள திடீர் அக்கறைக்கு எடுத்து காட்டாகும்.

ஐந்தாண்டுத் திட்டம்—ஆண்டி மடமா?

லண்டன், ஜுன் 19—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 90 கோடி பவுன் வரை அந்நியர் உதவி தேவைப்படுகிறதாம்.

வெளிநாடுகளில் கடன் பெறுவது எதிர்பார்த்த அளவைவிட மிகக் கடினமாக உள்ளதாம். உடனடியாக இந்தியாவுக்கு 20 கோடி பவுன்வரை கடன் தேவையாம். பிரிட்டனிடமோ, உலகப் பாங்கியிடமோ எதும் எதிர்பார்த்து பயன் இல்லையாம்! அமெரிக்க விரும்பினால் உதவியளிக்கக் கூடுமாம்.

இத்தகவலை 'பைனான்சியல் டைம்ஸ்' என்ற ஏடு வெளியிட்டுள்ளது.

தொழிற்சாலை அமைக்க அனுமதி பெறும் முதலாளிகள்

'போதுமான மூலதனம் வைத்திருக்கிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டும்'

ஆட்சியாளர்களின் கடமைபற்றி அறிவுரை

சென்னை, ஜுன் 19—

சென்னை 'ஜெனரல் அண்டு இண்டஸ்ட்ரியல் ஒர்க்கர்ஸ் யூனியன்' 13-வது ஆண்டுவிழாவும்-மாநாடும், 17—6—57 மாலை 6-30 மணிக்கு, சென்னை—வண்ணை 'பென்ஷனர் லைனி'ல் நடைபெற்றது.

இவ்விழாவில் ஏராளமான தொழிலாளர்களும், பொதுமக்களும் பெருமளவில் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

நகரமன்ற உறுப்பினர் தோழர் சி. கோவிந்தராசுலு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், அண்ணா அவர்கள் கலந்து கொண்டு அரியதோர் கருத்துரை வழங்கினார்கள்.

தலைவர் தனது தலைமையுரையில் தொழிலாளர் குறைகளை அரசியலார் கவனிக்க வேண்டியதின் அவசியத்தையும் தனிப்பட்டோர் துறையில் தொழிற்சாலை அமைக்க அனுமதி வழங்கும் ஆட்சியாளர், அனுமதி பெறும் முதலாளிகள் போதுமான மூலதனம் வைத்திருக்கிறார்களா என்பதையும், அவர்கள் தொழிலாளர்களுக்குப் போதுமான ஊதியம் வழங்குவார்களா என்பதையும் கவனித்து அனுமதி வழங்கவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

வரவேற்புரை வழங்கிய யூனியன் செயலாளர் தோழர் டி. ஆர். கண்ணபிரான், யூனியன் 13-ஆண்டு காலமாக ஆற்றியுள்ள அரும் பெரும் பணிகளையும், இவ்விழாவிற்காக தொழிலாளர்களுக்கு விடுமுறை அளித்த பீடி முதலாளிகளைப் பாராட்டியும், விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றும் உரையாற்றினார்.

கொடியேற்றிவைத்த யூனியன் துணைச் செயலாளர் தோழர் வி. ஜி. இராமசாமி, இத் தொழிற் சங்கம் எந்த அரசியல் கட்சிக்கும் தன்னை 'அடகு' வைத்துக் கொள்ளாமல் பணியாற்றிவருவதையும், அரசியல் கட்சிகளுக்குத் துணை போன தொழிற் சங்கங்களுக்கு நேர்ந்த விளைவுகளை ஆதாரப் பூர்வமாக எடுத்துக்காட்டியும், கொடியின் சிறப்பை விளக்கியும் உரையாற்றினார்.

திறப்புரையாற்றிய யூனியன் தலைவர் தோழர் ஏ. வி. குமார் (ஆந்திரர்) தொழிற் சங்கங்களின் நோக்கத்தையும்— தோற்றத்தையும், ஏன் அரசியல் கட்சிகளுடன் இணையக் கூடாது என்பதற்கான விளக்கமும், அண்ணா அவர்களுக்கும் தனக்கும் இருந்த தனிப்பட்ட தொடர்பு பற்றியும் விளக்கிப் பேசினார்.

பின்னர், ஓட்டல் தொழிலாளர்களின் குறைகளைப் போக்கவும், ஸ்டுடியோ தொழிலாளர்களின் குறைகளைப் போக்கவும், இரண்டுக்கும் இரண்டு விசாரணைக் குழுக்கள் அமைக்குமாறு அரசியலாரைக் கோரியும், புகையிலைக்கும், மற்ற பொருட்களுக்கும் இப்போது வரிவிதித்திருக்கும் இந்தியப் பேரரசினை வன்மையாகக் கண்டித்தும், புதிய வரிகளை திரும்பப் பெறுமாறு கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்களை முன்மொழிந்தும் வழிமொழிந்தும் தோழர் ஆர். ஆர். சந்திரன் அவர்களும், மற்றத் தோழர்களும் பேசினர்.

இறுதியில் அண்ணா அவர்கள் பேருரை யாற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி கூற ஆண்டு விழாவும்—மாநாடும் சிறப்பாக முடிவுற்றது.

(க—கி)

புள்ளம்பாக்கம் கழகத் தோழர் தாக்கப்பட்ட வழக்கு

ஒரு எதிரிக்கு ஒரு மாத சிறைத் தண்டனை தந்து தீர்ப்பு

ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் மந்திரி பக்தவத்சலத்திற்கு எதிராக நமது அபேட்சகர் சி. வி. எம். அண்ணாமலை அவர்களுக்குத் தேர்தலின்போது தீவிரமாக வேலை செய்த காரணத்தினால், பிள்ளைப்பாக்கம் தி. மு. கழகத் தோழர் தம்பிரான் அவர்களைப் பயங்கரமான ஆயுதங்களால் தாக்கி, வெட்டிக் கொலை செய்ய முயன்ற குள்ளன், மற்றும் இருவர் மீதும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட், தோழர் தம்பிரானைக் கொல்லும் நோக்கத்தோடு ஆத்திரங் கொண்டு வெறியாட்டமாடிய முதல் எதிரி குள்ளனுக்கு ஒரு மாத சிறைத் தண்டனை மட்டுமே தந்து சென்ற மாதம் தீர்ப்பு வழங்கியிருப்பதாகத் தெரிகிறது.

இரண்டாவது எதிரிக்கு கோர்ட் கலையும்வரை சிறைத் தண்டனையும் ரூ. 30 அபராதமும் தரப்பட்டது என்றும், மூன்றாவது எதிரி விடுவிக்கப்பட்டதாயும் கூறப்படுகிறது.

தாக்கப்பட்ட கழகத் தோழர் தம்பிரான், உயிர் தப்பியதே மறு பிழைப்பாகிவிட்டது.

அந்த அளவுக்கு இவரைத் தாக்கியவர்களுக்குத் தரப்பட்டுள்ள தண்டனையோ, ஒரு மாத சிறையாம்.

தமிழ்நாட்டில் மற்றுமொரு பொறியியல் கல்லூரி

மதுரையில் அமையும்

சென்னை, ஜுன் 18—

தமிழ் நாட்டில் மேலும் ஒரு 'எஞ்சினீயரிங்' கல்லூரி நிறுவப்படும் என்று தெரியவருகிறது.

மதுரையில் அமையும் இந்தக் கல்லூரி, மாநிலத்தின் ஏழாவது பொறியியற் கல்லூரியாக இருக்கும்.

மதுரை தியாகராசர் கல்லூரி நிதி 'டிரஸ்ட்' துவங்கும் இந்தக் கல்லூரியை நிறுவுவது பற்றி சர்க்கார் பரிசிலித்துக்கொண்டிருப்பதாகவும், எந்த நேரமும் முடிவு அறிவிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

பெங்களூர் சர்க்கார் 'எஞ்சினீயரிங்' கல்லூரி முதல்வர் சன்னபாசவய்யா, திருவனந்தபுரம் கல்லூரிப் பேராசிரியர் ராசாராம், டி. ஐ. சைகிள் கம்பெனி டைரக்டர் போர்சித், மற்றும் தென் பிராந்திய துணைக் கல்வி ஆலோசகர் கே. என். சுந்தரம் ஆகியோரடங்கிய நிபுணர் குழு சீக்கிரமே மதுரை சென்று, உத்தேசக் கல்லூரிக்கான தேவைகளை ஆராய்வர் என்று தெரியவருகிறது.

கம்யூனிஸ்டின் மரண தண்டனையை குறைக்க கேரள சர்க்காரின் கருணை மனு!

குடியரசுத் தலைவர் இணங்குவார்

புதுடில்லி, ஜுன் 18—

காங்கிரஸ்காரர் ஒருவரைக் கொலை செய்தார் என்ற குற்றத்திற்காகத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட வாசுப் பிள்ளை என்ற கம்யூனிஸ்டின் தண்டனையைக் குறைக்க வேண்டும் என்ற கேரள சர்க்காரின் கருணை மனுமீது குடியரசுத் தலைவர் சீக்கிரமே உத்தரவு பிறப்பிப்பார் என்று கூறப்படுகிறது.

இது குறித்துப் பரிசீலித்துவரும் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் இப்போது நைனிடாவில் இருப்பதாகவும், கேரள சர்க்காரின் கோரிக்கைக்கு குடியரசுத் தலைவர் இணங்கிவிடக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

மறைவு

வலங்கைமான் கழகத் தோழரும்—தஞ்சை மாவட்ட தி. மு. கழக உறுப்பினருமான தோழர் அரங்கண்ணல் அவர்கள் 12-6-57 தமது 27-ம் வயதில் இயற்கையெய்தினார். 13—6—57 அன்று மாலை 4 மணிக்கு நடைபெற்ற சவ ஊர்வலத்தில் கழகத் தோழர்களும், பொதுமக்களும், உறவினர்களும் கலந்து கொண்டு, மறைந்த அவ்வீரருக்கு தங்களின் இறுதி மரியாதையை தெரிவித்துக் கொண்டனர்.

கழகத் தோழரின் மறைவால் வருந்தும் அவரது துணைவியாரிருக்கும், உறவினர்களுக்கும் வலங்கைமான் தி. மு. கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. நமது அனுதாபமும் உரித்தாகுக.

* * *

சிதம்பரம் வட்டம்—மேலமூங்கிலடி தி. மு. கழகச் செயலாளர் தோழர் டி. ஆர். சபாபதி அவர்களின் துணைவியாரும், கழக உறுப்பினருமான தோழியர் தனம், தனது 18 வது வயதில் இயற்கையடைந்த செய்தி கேட்டு வருந்துகிறோம். துணைவியைப் பிரிந்து வருந்தும் தோழருக்கு நமது ஆறுதலையும் அனுதாபத்தையும் உரித்தாக்குகிறோம்.

(ஆ—ர்.)

அசாமில் தொழிற்சாலை என்று வீணுக நம்ப வேண்டாமாம்!

உறுதிமொழி தந்த ஆசாத் மாநில முதல்வரை ஏமாற்றுகிறுர்

புதுடில்லி, ஜூன் 18—

'அசாமில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவுவது பற்றி ஜூலையில் மாநாடு கூட்டிப் பேசுவோம்' என்று அசாம் தூதுக் குழுவிற்குத் தெரிவித்திருந்த மத்திய அமைச்சர் மௌலானு ஆசாத், இப்போது, 'ஏற்கனவே பீகாரில் அந்தத் தொழிற்சாலையை நிறுவுவது என்று செய்துள்ள முடிவு மாற்றப்படும் என்று நம்பிக் கொண்டிருக்க வேண்டாம்' என்று எச்சரித்திருக்கிறாராம், அசாம் மாநில முதன் மந்திரியை!

பகிரங்கமான இந்த ஏமாற்றுவித்தையில் ஆசாத் ஈடுபட்டதற்குக் காரணம், 'மாநாடு கூட்டிப் பேசுவோம்' என்று அவர் உறுதி தந்த போது பண்டிதரும் ஊரில் இல்லை என்பதுடன், தனது இதர சக மந்திரிகளையும் அவர் கலந்தாலோசிக்கவில்லையாம்! அத்துடன், குறிப்பாக, பீகாரில் நிறுவுவது என்ற முடிவை தவிர்க்க முடியாமல் மேற்கொண்ட மத்திய மந்திரி சபையின் 'எண்ணெய்க் குழு'வையும் அவர் கலந்தாலோசிக்கவில்லையாம்! இதுதான் எச்சரிக்கைக்குக் காரணமாம்!

அண்ணு கருத்துரை] [1-ம் பக்கத் தொடர்ச்சி

வார்த்தையளவு சமாதானங்கள் வாழ்க்கையை உயர்த்தாது

உங்களுக்குக் கிடைக்கும்' என்று சமாதானங்களை எடுத்துச் சொல்வதிலே மட்டும் காரியம் நடந்து விடாது.

"இனி, நாளாக நாளாக உழைப்புக்கு மதிப்பு கிடைக்க வேண்டுமென்றுல், உழைப்பாளிக்கு வாழ்க்கையிலே மதிப்பு இருக்கவேண்டும். இன்றையத் தினம் உழைப்பாளிக்கு அத்தகைய மதிப்பு இல்லை. அந்த உழைப்பாளிக்கு மதிப்பு எற்பட்டால் சமுதாயத்திற்கு மதிப்பு ஏற்படும்.

"அது எப்படியென்று கேட்டால், எந்த நாடாக இருந்தாலும் உழைப்பாளி சமுதாயம்தான் அதிகம்; உழைக்காமலிருக்கின்றவர்கள்தான் குறைவு. 'உழைக்கின்றவர்கள்தான் அதிகமாக இருக்கின்றுர்கள் - அதிகமாக இருக்கின்ற மக்கள் வாழ்க்கையில் மதிப்போடு இருக்கின்றுர்கள்' என்றுல், சமூகம் நல்ல முறையிலே வளருகின்றது என்று பொருள்.

"ஆகையினுலே சமுதாயத்திற்கு நன்மை கிடைக்க வேண்டுமென்றுலும், அந்த சமுதாயத்தை கட்டிக் காப்பாற்றுகின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஆட்சியாளர்கள் நல்ல மதிப்புப் பெறவேண்டுமென்றுலும், பாட்டாளி சமுதாயத்தின் மனதிலே நல்ல நிம்மதி ஏற்பட வேண்டும் — அவர்கள் வாழ்க்கைக்கு நல்ல நிம்மதி ஏற்பட வேண்டும்.

பிரிட்டனின் பிடிவாதப் போக்கு

மூன்றுவது நீர்வளிக் குண்டை வெடித்ததாம்!

லண்டன், ஜூன் 19—

பிரிட்டன் இன்று மத்திய பசிபிக்கில் மூன்றுவது நீர்வளிக் குண்டை வெடித்துள்ளதாகச் செய்திகள் மூலம் தெரியவருகிறது.

வந்தவாசி தொகுதி தேர்தல் வழக்கு

வந்தவாசி சட்டசபைத் தொகுதியில் தி. மு. க. ஆதரவு பெற்ற அபேட்சகர் எ. தருமகவுண்டர் அவர்கள் தாக்கல் செய்திருக்கும் தேர்தல் வழக்கு வேலூர் செஷன்ஸ் ஜட்ஜ் கே. எஸ். வெங்கட்ராமன் அவர்கள் முன்னிலையில் 28—6—57-ல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

தென் சீனுவில் பட்டினிச் சாவு!

500 பேர் மாண்டனர்?

பீகிங், ஜூன் 19—

"தென் சீனுவில் க்வாங்சி மாகாணத்தில். சென்ற ஆண்டில் சுமார் 500 பேர் பஞ்சத்தால் மடிந்தனர்"

என்று, சீன 'மக்கள் தினசரி' என்ற பத்திரிகை தெரிவித்திருக்கிறதாம்.

1954-ம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளம், அதற்குப்பின் ஏற்பட்ட பஞ்சம் இவற்றின் காரணமாகவே இந்தக் கோரம் ஏற்பட்டதாம்!

மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் பஞ்சம் மிகக் கடுமையானதாக இருந்ததாம்; அதனுல் அங்கிருந்து சுமார் 14,000 மக்கள் வேறு இடங்களுக்கு ஓடிவிட்டனராம்!

இதன் விளைவாக, 'பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் போதுமான நிவாரண ஏற்பாடுகளைச் செய்யவில்லை' என்று கூறி, கட்சி அங்கத்தினர்கள், மற்றும் உதவி கவர்னர்கள் உள்ளிட்ட ஒன்பது அதிகாரிகள் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர் என்றும் அந்தப் பத்திரிகை தகவல் தந்துள்ளது.

எதிர்க் கட்சிகள் வெளிநடப்பு

கவர்னர் உரையை வெறுத்தனர்!

பம்பாய், ஜூன் 19—

இன்று பம்பாய் சட்டசபையில் கவர்னர் தனது உரையை நிகழ்த்த வந்தபோது எதிர்க்கட்சியான சம்யுக்த மகாராஷ்டிரம், மகா குசராத், ஜனதா பரிஷத் ஆகியவைகளின் உறுப்பினர்கள் சபைக் கூட்டத்திலிருந்து வெளியேறினர்.

இருமொழி மாநிலத்தின் பிரதியாக கவர்னர் இருப்பதாகவும், அதனுல் அவருடைய உரையைக் கேட்பதற்குத் தாங்கள் விரும்பவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அணு ஆயுதசோதனைகள் நிறுத்திவைக்கப் படும்?

ஐசனேவர் நிலை என்ன?

வாஷிங்டன், ஜூன் 19—

அணு ஆயுத சோதனைகளைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பது சம்பந்தமாக ஏதாவது திருப்திகரமான ஏற்பாட்டிற்கு வர அமெரிக்கா தயாராக இருப்பதாக ஐசனேவர் அறிவித்துள்ளார்.

சக தோழரை கம்யூனிஸ்டுகள் தூக்கிலிட்டனர்?

கோலாலம்பூர், ஜூன் 19—

வடக்கு மலாயாவில் சரணடைந்துள்ள ஒரு புரட்சிக்காரர் தந்த தகவலின்படி, கம்யூனிஸ்டுகள் தங்கள் தோழர் ஒருவரையே தூக்கிலிட்டனராம்!

பெருமாள் என்ற 31 வயதான அந்த பிரபல கம்யூனிஸ்டு, 1948-ல், கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டபோது தலைமறைவானுராம்!

அவரிடம் ஒரு நாள், சர்க்கார் வெளியிட்டிருந்த சரணடைவது பற்றிய துண்டுப்பிரசுரம் காணப்பட்டதாம்; அதற்காக அவரது சக கம்யூனிஸ்டுத் தோழர்கள், ஓராண்டுக்குமுன் தோழர் பெருமாளை தூக்கிலிட்டார்களாம்!

கம்யூனிஸ்டுகளால் தூக்கிலிடப்பட்ட பெருமாள், முதுகில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டாராம்.

தலைமறைவாக இருக்கும் கம்யூனிஸ்டுகளில் விரல்விட்டு எண்ணக்கூடிய 'இந்தியர்'கள் மலாயாவுக்கு சுதந்திரம் தரப்படும் என்ற செய்தி கேட்டபின் நாடு திரும்ப விரும்பியதாகவும், ஆனுல் அங்கு ஆதிக்கம் செலுத்திவரும் சீனர்களால்தான் 'இந்தியர்'கள் நாடு திரும்ப இயலாமலிருப்பதாகவும் சரணடைந்துள்ள முனுசாமி என்ற அந்தப் புரட்சிக்காரர் கூறியிருக்கிறாராம்.

கொல்லப்பட்ட பெருமாள், சுபாஷ் சந்திரபோசின் தலைமையிலிருந்த இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர் என்றும், 1948-ல் தலைமறைவாகச் செல்லு முன் தன் குடும்பத்தாரை தாயகத்திற்கு அனுப்பிவிட்டு, அண்மையில்தான் ருக்மணி என்ற பெண்ணை தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார் என்றும் தெரியவருகிறது.

சகாக்களால் கொல்லப்பட்ட பெருமாளின் தலையைக் கொணருவோருக்கு ரூ. 25,000 பரிசளிக்கப்படுமென சர்க்கார் பிரகடனப் படுத்தியிருந்தது என்றும் கூறப்படுகிறது.

பனப்பாக்கத்தில் அண்ணு

22—6—57 மாலை 6-மணிக்கு பனப்பாக்கம் கிராமம் (வடார்க்காடு மாவட்டம்) திருவள்ளுவர் இளைஞர் படிப்பகத் திறப்புவிழா தோழர் எஸ். ஆர். டி. எஸ். சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும்; அதுபோது அண்ணு அவர்களும். தோழர் மா. கி. தசரதன் அவர்களும், மற்றும் பலரும் சிறப்புரையாற்றுவர்.

★★★★★★★★★★★★★★★★★

சேலம்தொகுதி தேர்தல் வழக்குநிதி

சிறப்புக் கூட்டம்

23—6—57 காலை 9-மணிக்கு திண்டுக்கல்—கே. எம். எஸ். பேட்டையில், ('சக்தி' திரையரங்கின் எதிரில்) தோழர் பி. கந்தசாமி அவர்கள் தலைமையில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'குறள் நெறி' எனும் பொருள் பற்றியும், டி. கே. சீனிவாசன் அவர்கள் 'தத்துவ வரலாறு' எனும் பொருள்பற்றியும் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

நன்கொடை: ரூ. 1. அணு 8.
பெண்களுக்கு: அணு 4.

★★★★★★★★★★★★★★★★★

தமிழ்நாடு திருக்குறள் 3-வது மாநாடு

ஜூன் திங்கள் 22, 23 ஆகிய இரு நாட்களிலும், திருச்சி தேவர் மன்றத்தில் மேற்படி மாநாடு தோழர் திருக்குறள் வி. முனுசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்; மாநாட்டை தோழர் தி. கருமுத்துசுந்தரம்(செட்டியார்) அவர்கள் துவக்கிவைப்பார். அறிஞர்கள் பலரின் சொற்பொழிவும் இசைவிருந்தும் நிகழும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

23—6—57 மாலை 6-30 மணிக்கு, கோவை தியாகராயர் படிப்பகத்தில், நகர தி. மு. கழக உதயசூரியன் சொற்பயிற்சி மன்றச் சார்பில், தோழர் ம, அரங்கசாமி தலைமையில், 'இன்புளுயன்சா எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

பொறுமை இழந்த சோஷலிஸ்டுத் தலைவர்

ஊழியர் கூட்டத்திலிருந்து வெளியேறினர்

லோகியாவிற்கு ஈரோடில் ஏற்பட்ட அனுபவம்

ஈரோடு, ஜூன் 17—

இங்கு கட்சி ஊழியர்களிடை பேசவந்த சோஷலிஸ்டுத் தலைவர் டாக்டர் லோகியா ஊழியர்கள் தெரிவித்த சில அதிருப்திகளைத் தாங்கிக்கொள்ள முடியாதவராய் பொறுமைஇழந்து, கோபாவேசமாய் கூட்டத்தைவிட்டே வெளியேறிவிட்டார் என்று தெரிய வருகிறது.

ஈரோடு சோஷலிஸ்டு ஊழியர்களிடை டாக்டர் லோகியா, உத்தேச ஆகஸ்டு போராட்டம் பற்றி விளக்கிவிட்டு, 'எத்தனை பேர் போராட்டத்தில் கலந்து கொள்வீர்கள்; ஏற்பாடுகள் தயாரா?' என்று கேட்டாராம்!

கூடியிருந்த ஊழியர்கள், தங்களுக்கு தமிழ்நாடு சோஷலிஸ்டுக் கட்சி அலுவலகத்திலிருந்தோ, கோவை மாவட்ட அலுவலகத்திலிருந்தோ சுற்றறிக்கைகள் வரவில்லை என்றும், ஈரோடு கிளையை சரியாக நடத்துவது இல்லை என்றும், தங்களுக்கு சுற்றறிக்கைகள் அனுப்பப்படும்வரை தாங்கள் போராட்டத்தில் கலந்துகொள்வதற்கில்லை என்றும் தெரிவித்தனராம்!

கடலூர், காஞ்சீபுரம், சிதம்பரம் போன்ற ஊர்களுக்குக்கூட சுற்றறிக்கை வரவில்லை என்றும், என்றுலும், அங்குள்ள கட்சி ஊழியர்கள் போராட்டத்தில் கலந்துகொள்ளச் சம்மதித்திருப்பதாகவும் லோகியா கூறியும், ஊழியர்கள் மறுத்து விட்டனராம்!

உடனே கோபங் கொண்ட லோகியா, கூட்டத்தைவிட்டு வெளியேறி விட்டாராம்!

என்ன சுறுசுறுப்பு - என்ன தாராளம்!

புதுடில்லி, ஜூன் 19—

'இன்புளுயன்சா' தடுப்புக்காக ஏதேனும் உதவி தேவையா?' என்று, மாநில சுகாதார அதிகாரிகளை டெல்லி சுகாதார இலாகா கேட்டிருக்கிறதாம்!

புதுடில்லி, ஜூன் 20—

அஞ்சல் நிலைய சேமிப்புப் பாங்கிகளில் 1957 ஜூன் முதல் தேதி முதல் அரை சத விகிதம் வட்டி அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

கழகக் கூட்டம்

★

கோவிலடி:

(தஞ்சை மாவட்டம்)

22—6—57 இரவு 7 மணிக்கு

தலைவர்: தே. பட்சிராசன்.

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்
அன்பில்-தருமலிங்கம்

(அன்று மாலை 6-மணிக்கு கோவிலடி ஊராண்மைக் கழக நூல் நிலையப் படிப்பகத்தில் நிறுவியிருக்கும் 'திருவள்ளுவர்' உருவச் சிலையை பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைப்பார்.

சென்னை 44-வது வட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு:

22—6—57 இரவு 9-மணிக்கு மேற்படி வட்ட செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்; அதுபோது, கழக ஆண்டுவிழா பற்றியும், பணிமனை செப்பனிடுவது பற்றியும் முடிவெடுக்கப்படும்.

தமிழ் எழுத்தாளர் சங்கம் 5-வது மாநாடு

ஜூன் திங்கள் 22—23-ம் நாட்களில் சென்னை இராஜாஜி மண்டபத்தில் தமிழ் எழுத்தாளர் 5-வது மாநாடு, முறை திரு. ஏ. ஜி. வெங்கிடாச்சாரி, திரு. கி. வா. சகந்நாதன் ஆகியோர் தலைமையில் நடைபெறும்; அதுபோது திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் மாநாட்டைத் துவக்கிவைப்பார். பம்மல் சம்பந்த முதலியார், நாவலர் சோமசுந்தர பாரதியார் மற்றும் பலரும் சிறப்புரையாற்றுவர்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஜூன்

21: மாலை 5 மணி: கடம்பங்குடி
இரவு 8 ,, கோடாவி கருப்பூர்
22: மாலை 5 ,, சித்திரக்குடி
இரவு 8 ,, கோவிலடி
23: காலை 9 ,, திண்டுக்கல்
மாலை 5 ,, மதுரை
இரவு 10 ,, வெள்ளாளப்பட்டி
24: மாலை பாண்டியூர்
25: மாலை 5 ,, அலவாக் கோட்டை
இரவு 8 ,, கல்லல்
26: காலை இருங்களூர்
மாலை லப்பைக் குடிக்காடு

தூத்துக்குடியில்

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

ஜூன்

23: காலை 10-30 மணி: நெல்லை மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் — பொதுக் குழு உறுப்பினர் தேர்வு.
மாலை 4 மணி: தாளமுத்தி அனுதாபக் கூட்டம்
,, 6-30 மணி: பொதுக்கூட்டம்

சி. பி. சிற்றரசு

மன்னுர்குடி பகுதிகளில் சுற்றுப்பயணம்

ஜூன்

26: வடுவூர் தென்பாதி
27: எடஅன்னவாசல்
28: கண்டகிரயம்
29: இலக்குமாங்குடி

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.